ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය

නීතිවේදී උපාධි පාඨමාලාව - 5 වන මට්ටම

අවසාන පරීක්ෂණය - **2010**

පරිපාලන නීතිය – **LWU 3311**

කාලය - පැය තුනයි

---

දිනය 2010 අප්‍රේල් මස 01 වන දින      වේලාව: පෙ .ව. 9.30 සිට ප .ව. 12.30 දක්වා

---

ප්‍රශ්න පහකට පමණක් පිළිතුරු සපයන්න.
අපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු අඩු කරනු ලැබේ.

1. "බලාතික්‍රමණය වීමේ හේතුව මත පරිපාලන තීන්දු අවලංගු කිරීමෙන් අධිකරණ විසින් පොදු බලධාරීන්ගෙන් අපේක්ෂා කරන ක්‍රියාකලාපයේ ස්වභාවය පැහැදිලි කරනු ලබයි. නෛතික පරිපාටියක් නොමැතිවීම එවැනි බලධාරීන්ගේ ක්‍රියාකලාපය විධිමත් කිරීමේ රීති සකස් කිරීමෙන් අධිකරණ නොවැළැක්වේ."

   අධිකරණ සමාලෝචනය පිළිබඳ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය පදනම ඇසුරෙන් මෙම ප්‍රකාශය විවේචනාත්මකව විභාග කරන්න.

2. තමනට එරෙහි චෝදනා පත්‍ර ගොනු නොකරමින් තමන් දිගු කාලයක් තිස්සේ රඳවා තබා ගැනීම සම්බන්ධයෙන් රජයට සිය විරෝධතාව ප්‍රකාශ කිරීම සඳහා හොල්බෝන් රිමාන්ඩ් බන්ධනාගාරයේ සිරකරුවෝ වහළට නැග ගත්හ. කලබලය පාලනය කිරීමෙන් අනතුරුව කැරැල්ලේ නායකයෙකු වශයෙන් කැස්ත්‍රෝ හඳුනාගනු ලැබූ අතර ඔහුව අන්‍යයන්ගෙන් වෙන් කොට පරීක්ෂණය පැවැත්වෙන තෙක් හුදෙකලා සිරමැදිරියක තබන ලදී.

   පරීක්ෂණය පැවැත්වෙන පළමු දිනයේ දී පරීක්ෂණ මණ්ඩලය විසින් චෝදනා පත්‍රයක් කැස්ත්‍රෝ වෙත නිකුත් කරන ලදී. 1998 රිමාන්ඩ් බන්ධනාගාර රීතිවල දක්වා ඇති විනය රීති උල්ලංඝණය කිරීමේ වැරදි සම්බන්ධයෙන් ඔහුට එරෙහිව චෝදනා නගන ලදී. එම චෝදනා අතර වහළේ සිට පිගානක් විසි කරමින් නිලධාරියෙකුට පහර දීම ඇතුළත් විය. තමන්ව හුදෙකලා සිර මැදිරයක රඳවා තිබූ කාලයේ දී සිදු වූ සිදුවීම්වලට අදාළ වෙනත් චෝදනාවල අන්තර්ගතය දැකීමෙන් කැස්ත්‍රෝ විස්මයට පත් විය. තමන්ට එරෙහිව නගන ලද චෝදනාවලට එරෙහි සාක්ෂිකරුවන් ඉදිරිපත් කිරීම සඳහා පරීක්ෂණය කල් තබන ලෙස කැස්ත්‍රෝ ඉල්ලා සිටියේය. එසේ කළ නොහැකි බව පරීක්ෂණ මණ්ඩලය කියා සිටියේය. තමන්ට එරෙහිව සාක්ෂි දුන් බන්ධනාගාර නිලධාරියාගෙන් හරස් ප්‍රශ්න ඇසීම සඳහා ඉඩ සලසන ලෙස කැස්ත්‍රෝ කළ ඉල්ලීම ද ප්‍රතික්ෂේප විය. සතියකට පසු දරුණු අපරාධකරුවන් රඳවා තැබීම සඳහා වෙන් කළ සිර කඳවුරකට කැස්ත්‍රෝ මාරු කරන ලදී.

   ලබා ගත හැකි ප්‍රතිකර්ම පිළිබඳව කැස්ත්‍රෝට උපදෙස් දෙන්න.

3. "මුල දී වාර්තාව මතුපිට නීතිය පිළිබඳ දෝෂය බලාතික්‍රමණ සංකල්පයට ව්‍යතිරේකයක් ලෙස සලකනු ලැබුව ද ඇනිස්මිනික් නඩු තීරණය මගින් වාර්තාව මතුපිට නීතිය පිළිබඳ දෝෂය බලාතික්‍රමණ සංකල්පය තුළට ඇතුළත් කරන ලදී."

   නඩු තීරණ ඇසුරෙන් මෙම ප්‍රකාශය සාකච්ඡා කරන්න.

4. "පාර්ලිමේන්තුව විසින් දෙනු ලැබූ ව්‍යවස්ථාපිත බලතල ක්‍රියාත්මක කිරීම සඳහා අමාත්‍යවරුන්ට පුළුල් අභිමතයක් දෙනු ලැබුව ද, අසීමිත හා අධිකරණවලට සාමාන්‍යයෙන් සමාලෝචනය කළ නොහැකි බලතල නැත්තේය. සිය අභිමතය භාවිත කිරීමේ දී අපක්ෂපාතී ලෙස, අවංකව, සාධාරණ ලෙස හා සිය උපරිම හැකියාවෙන් යුක්තව එය පාවිච්චි කිරීමේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය වගකීමක් අමාත්‍යවරුන් සතු වන්නේය." - per *Ranasinghe J., in J.B textiles Industries Ltd., v. Minister of Finance and Planning (1981) 2 S L R 238 at p.,256-257.*

අභිමතානුසාරී බලතල පිළිබඳ අධිකරණ පාලනය ඇසුරෙන් මෙම ප්‍රකාශය විවේචනාත්මකව සාකච්ඡා කරන්න.

5. ජලාල්ඩීන් රිදීගම නදියක් අසළ පිහිටි සිය ඉඩමේ හරක් මස් වෙළඳ සැලක් පිහිටුවිය. පසුව ඔහු එය සොසේජස් නිෂ්පාදනය කරන කර්මාන්තශාලාවක් බවට දියුණු කළේය. මස් සේදීම සඳහා භාවිත කරන වතුර ගම් වැසියන් විසින් නෑම සහ පානය සඳහා යොදා ගන්නා නදියට මුදා හැරේ. එහි ප්‍රතිඵලයක් වශයෙන් නදියේ ජලය අපිරිසිදු වී ඇත . නදියේ ජලය භාවිත කරන ප්‍රදේශයේ ජනයා අසනීප වූ අතර නදියේ නෑමෙන් පසු අසනීප වූ දරුවන් දෙදෙනෙකු මරණයට පත් වූහ. ගැබිණි මාතාවක් ගබ්සාවකට ලක් වූ අතර වෛද්‍ය පරීක්ෂණයේ දී හෙළි වූයේ ඇය ජලාශ්‍රිත රෝගයක් නිසා අසනීප වූ බවයි.

රිදීගම නගර සභාවට නගර සභා පණත මගින් මාර්ග, අතුරු මාවත් හා ක්‍රීඩා භූමි නඩත්තු කිරීම, කැලිකසල ඉවත් කිරීම සහ ප්‍රදේශයේ පරිසරය පිරිසිදුව තබා ගැනීමේ බලය පවරා ඇත. ජලාල්ඩීන් විසින් අපිරිසිදු ජලය නදියට මුදා හැරීම පිළිබඳව ගම් වැසියෝ වාචිකව හා ලිඛිතව රිදීගම නගර සභාවේ සභාපතිවරයාට පැමිණිලි ඉදිරිපත්කොට අපිරිසිදු ජලය නදියට මුදාහැරීමේ ක්‍රියාව ක්‍රියාව නවතා දමන ලෙස හෝ සොසේජස් කර්මාන්තශාලාව එම ප්‍රදේශයෙන් ඉවත් කරන ලෙස ඉල්ලා සිටියහ. එහෙත් නගර සභාව විසින් කිසි පියවරක් නොගන්නා ලදී. තමන්ට කිසියම් ප්‍රතිකර්මයක් ඇත්දැයි ගම්වැසියෝ ඔබෙන් විමසති.

ඔවුනට උපදෙස් දෙන්න.

6. "ප්‍රකාශන ආඥාව පිළිබඳ සාධාරණ ප්‍රතිකර්මය පරිපාලන නීතියේ ප්‍රයෝජනවත් ආයුධයක් වුව ද, ශ්‍රී ලංකාව තුළ ප්‍රකාශන ආඥාව නිකුත් කිරීම සම්බන්ධයෙන් මතභේදාත්මක අධිකරණ බල ගැටලුවක් ඇත්තේය."

ඔබ ඉහත ප්‍රකාශය සමග එකග වන්නෙහි ද? තත්ත්වය දියුණු කිරීම සඳහා නඩු තීරණ ආශ්‍රයෙන් යෝජනා ඉදිරිපත් කරමින් පැහැදිලි කරන්න.

7. සුනාමි ආපදා වන්දි මණ්ඩලය චුකලී රෙස්ටෝරියාවේ පාර්ලිමේන්තු පණතකින් පිහිටුවනු ලැබූ ව්‍යවස්ථාපිත මණ්ඩලයකි. වෙනත් කරුණු අතර, සුනාමි ව්‍යසනයෙන් හානියට පත් වූ ගොඩනැගිලි හා නිවාස යළි ඉදිකිරීම සඳහා වන්දි පිරිනැමීමට මණ්ඩලයට බලතල ඇත. පණතේ එක් විධිවිධානයකින් දැක්වූයේ 'මණ්ඩලයේ තීරණය අවසානාත්මක හා තීරණාත්මක බවත් එය කිසිම අධිකරණයක දී ප්‍රශ්න කළ නොහැකි බවත්'ය. පණත මගින් ස්ථාපනය කරන ලද ව්‍යවස්ථාපිත සභාවක් වූ උපදේශක කමිටුවේ තක්සේරු වාර්තාවක් ලබා ගැනීමෙන් පසුව පමණක් වන්දි ගෙවීමට මණ්ඩලයට බලය පවරනු ලබන බව ද පණත සඳහන් කරයි. ක්ෂේත්‍ර චාරිකා පැවැත්වීමෙන් පසු සුනාමියෙන් සිදු වූ හානි පිළිබඳ ඇස්තමේන්තු සකස් කිරීමේ කාර්යය කමිටුවට භාර කර තිබුණි.

රෙස්ටෝරියාවේ සුනාමිය බල පෑ ප්‍රදේශයක් වන වෙලිංග්ටන් ප්‍රදේශයේ වැසියෙකු වන ඇන්ටනි සුනාමියෙන් අර්ධ වශයෙන් හානි වූ තම ගොඩනැගිල්ල යළි ඉදිකිරීම සඳහා වන්දි ඉල්ලා අයදුම්පතක් ඉදිරිපත් කළේය. හානියෙන් 50% ක් ඇන්ටනිට ගෙවීම සඳහා කමිටුව විසින් නිර්දේශ කරන ලදී. කෙසේ වුව ද මණ්ඩලයේ සභාපතිවරයා ඇන්ටනිගේ අයදුම්පත ප්‍රතික්ෂේපකොට එම ප්‍රතික්ෂේප කිරීමට හේතු කිසිවක් හෙළි කිරීම ද ප්‍රතික්ෂේප කළේය. තමාට වන්දි නොගෙවීමට හේතුව තමා විරුද්ධ පක්ෂයේ දේශපාලන පක්ෂයක සාමාජිකයෙකු වීම බව ඇන්ටනි කියා සිටී. තම චෝදනාව තහවුරු කිරීම පිණිස ඔහු උපදේශක සභාවේ වාර්තාව නොමැතිව වන්දි ගෙවනු ලැබූ බලයේ සිටින පක්ෂයේ ආධාරකරුවන්ගේ නම් ඉදිරිපත් කළේය.

ශ්‍රී ලංකාවේ අර්ථ නිරූපණ ආඥාපණතට සමාන ව්‍යවස්ථාවක් රෙස්ටෝරියාවේ ක්‍රියාත්මක වන බව උපකල්පනය කරමින් සභාපතිවරයාගේ තීරණය අභියෝගයට ලක් කළ හැකි දැයි ඇන්ටනිට උපදෙස් දෙන්න.

8. "කිසියම් විෂය ක්ෂේත්‍රයක සියලුම අංශ සම්බන්ධයෙන් ව්‍යවස්ථා පැණවීමට පාර්ලිමේන්තුවට කාලය නොමැති තත්ත්වයක් යටතේ රටක සීඝ්‍ර සංවර්ධනය උදෙසා අභිනියෝජිත ව්‍යවස්ථා අවශ්‍ය වේ. කෙසේ වුව ද ජනතාවගේ අයිතිවාසිකම් ආරක්ෂා කිරීම සඳහා අභිනියෝජිත නීති පාලනයට යටත් කර තැබිය යුත්තේය."

අභිනියෝජිත නීති පිළිබඳ අධිකරණ සමාලෝචනය ඇසුරෙන් මෙම ප්‍රකාශය සාකච්ඡා කරන්න.

හිමිකම් ඇවිරිණි
*************

THE OPEN UNIVERSITY OF SRI LANKA

LL.B. DEGREE PROGRAMME – LEVEL 5

FINAL EXAMINATION 2009/2010

ADMINISTRATIVE LAW – LWU 3311

DURATION - 3 HOURS

Date: 1st April 2010 Time: 9.30 a.m. -12.30 p.m.

Students will be penalized for illegible handwriting

Answer **FIVE** **(05)** questions only.

1. 'By quashing administrative decisions on the ground of *ultra vires*, the courts clarify the nature of conduct that is expected from public authorities. Lack of any legal procedure does not prevent courts from formulating rules for regulating the conduct of such authorities. '

   Critically discuss this statement in the light of the constitutional foundation of judicial review.

2. Prisoners at Holborn remand prison occupied the roof in an attempt to show their protest against the government for their long term detention without charge sheets being filed against them. After the disturbance was brought under control, Castro, one of the prisoners, was identified as a leader of the riot and was segregated and kept in solitary confinement till the date of inquiry.

   On the first day of the inquiry, the Board of Inquiry issued a charge sheet on Castro. He was charged with the offence of violating the rules of discipline as laid down in the Remand Prison Rules 1998. One of such charges related to an assault on an officer by throwing a plate from the roof. Castro was surprised by the contents of the other allegations which related to incidents that took place when he was kept in solitary confinement. Castro requested that proceedings be postponed to another date so that he could find witnesses to contradict the charges made against him. The Board of Inquiry said that the inquiry can not be postponed. His request to cross examine the prison officer who gave evidence against him was turned down. One week later Castgro was transferred to a concentration camp that was meant for detention of hardcore criminals.

   Advise Castro as to availability of any remedies.

3 'Although originally the error of law on the face of the record provided an exception to the concept of *ultra vires* the 'Anisminic' case brought the doctrine of error of law on the face of the record within the *ultra vires*.principle'.

Discuss this statement with reference to case law.

4. 'Although ministers may be vested with wide discretion in the exercise of statutory powers given to them by Parliament, there is, however no power which is unfettered and which the courts cannot ordinarily review:.. In exercising their discretion ministers owe a constitutional duty to perform it fairly, honestly, reasonably and to the best of their ability...'

- per *Ranasinghe J.,in J.B textiles Industries Ltd., v. Minister of Finance and Planning (1981) 2 S L R 238 at p. 256-257.*

Critically discuss this statement in the light of the judicial control of discretionary power.

5. Jalaldeen put up a beef stall on his land which is situated near a stream in Ridigama. Later he developed it into a factory manufacturing sausages. The water that is used to clean meat is discharged to the nearby stream which is used by the villagers for drinking and bathing. As a result the stream is polluted with the water discharged from the factory. The people in the area who used the stream fell ill and there were deaths of two little children who fell ill after bathing in the stream. A pregnant mother suffered an abortion and the medical examination revealed that she fell ill due to a water borne disease.

The Urban Council of 'Ridigama' is empowered by Town Councils Act to maintain roads, by lanes and grounds, to ensure disposal of garbage and to take action to maintain cleanliness in the environment of the area. The villagers made several complaints orally and in writing to the Chairperson of the Ridigama Urban Council regarding release of polluted water to the stream by Jalaldeen and requested him to take steps to prevent the meat factory form discharging waste water into the stream or to remove the sausages factory from the area. But no action was taken by the Urban Council. Now the villagers seek your advice as to whether they have any remedy.

Advise them.

6 'Though the equitable remedy of order of declaration is a very useful weapon in the field of Administrative law, there is a controversial jurisdictional problem in regard to the issue of the order of declaration in Sri Lanka.'

Do you agree with the above statement? Explain and give suggestions with reference to decided cases to improve the situation.

7. The Tsunami Disaster Compensation Board is a statutory body established under an Act of Parliament of Restoria. The Board has powers *inter alia* to grant compensation for the reconstruction of buildings and houses damaged by the tsunami. One of the provisions of the Act declares that "the board's decision is final and conclusive and cannot be challenged in any court of law". The Act further states that the Board is empowered to grant compensation only after obtaining an assessment report from the Advisory Committee which is a statutory body established by the Act. The Committee was entrusted with the task of providing estimates regarding damages that was caused by the tsunami after conducting field visits.

Antony, a resident of a tsunami affected area in Wellington in Restoria forwarded an application to obtain compensation for reconstruction of his building which was partly damaged by the tsunami. The Committee recommended for the payment of 50% of the damage to Antony. However, the Chairperson of the Board rejected his application and refused to give any reasons for the rejection. Antony alleges that he was refused payment of compensation due to the fact that he was a member of the opposition political party. In order to prove his allegation he cited the names of supporters of the party in power who were paid compensation without obtaining a report from the Advisory Committee

Assuming that a statute similar to the Interpretation Ordinance of Sri Lanka is operative in Restoria, advise Antony whether he could challenge the decision of the Chairperson.

8 'Delegated legislation is necessary for the speedy development of a country in a context where Parliament does not have time to enact legislation dealing with each and every aspect of a particular subject matter. However delegated legislation needs to be kept under control to safeguard the interests of people.'

Discuss this statement with reference to judicial control of delegated legislation.

- Copyright reserved -

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் - 5
இறுதிப் பரீட்சை– 2009/2010
**LWU 3311/4331** – நிருவாகச் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 01.04.2010 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. 'நிருவாக தீர்மானங்களை வலுவிகழ்தல் எனும் அடிப்படையில் இல்லாதொழிப்பதன் மூலம் பொது அதிகாரிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தையின் தன்மையை நீதிமன்றங்கள் தெளிவுபடுத்துகின்றன. அத்தகைய அதிகாரிகளின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கென விதிகளை ஆக்குவதிலிருந்து ஏதேனும் சட்ட நடைபடிமுறை இல்லாமையானது நீதிமன்றங்களை தடைசெய்வதில்லை.'

   நீதிமுறை மீளாய்விற்கான அரசியலமைப்பு அடிப்படை எனும் பின்னணியில் இக் கூற்றை விமர்சித்து மதிப்பீடு செய்க.

2. தமக்கெதிரான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யாது தம்மை நீண்டகாலமாக தடுத்து வைத்திருப்பதற்காக அரசாங்கத்திற்கு எதிராக தமது எதிர்பினை காட்டும் முயற்சியில் ஹெறால்போன் தடுப்புக்காவல் சிறைச்சாலையின் கைதிகள் கூரையில் ஏறியிருந்தனர். இடையூறுகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டபின்னர் கைதிகளில் ஒருவனான கஸ்ரோ புரட்சியின் தலைவனாக அடையாளம் காணப்பட்டதுடன் விசாரணைக்கான திகதி வரும் வரை தனிமைப்படுத்தப்பட்டு தனியான சிறையில் வைக்கப்பட்டான்.

   விசாரணையின் முதன் நாளன்று விசாரணை சபை கஸ்ரோ மீதான குற்றப்பத்திரிகை வழங்கியது. 1998ஆம் ஆண்டு தடுப்புக்காவல் சிறைச்சாலை விதிகளில் கூறப்பட்டுள்ளவாறான ஒழுக்க விதிகளை மீறய குற்றத்திற்காக அவன் குற்றஞ்சாட்டப்பட்டான். ஒரு அலுவலரை கூரையில் இருந்து தட்டை எறிந்து தாக்கியமையுடன் தொடர்புடையதாக ஒரு குற்றம் இருந்தது. அவனைத் தனிமைப்படுத்தப்பட்ட சிறைச்சாலையில் வைத்திருக்கும் போது, இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடையதான ஏனைய குற்றங்களின் உள்ளடக்கத்தைக் கண்டு கஸ்ரோ ஆச்சரியமடைந்தான். தனக்கு எதிராக செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் முரண்பாட்டைக்காட்டுவதற்கு சாட்சிகளை தேடுவதற்கு முடியுமாக இருக்கும் என்பதால் விசாரணை நடவடிக்கையை மற்றொரு நாளுக்கு ஒத்திவைக்கும்படி கஸ்ரோ வேண்டுகோள் விடுத்தான். விசாரணையைத் தள்ளிவைக்க முடியாதென விசாரணை சபை கூறியது. தனக்கெதிராக சாட்சியமளித்த சிறைச்சாலை உத்தியோகத்தரை குறுக்கு விசாரணை செய்வதற்கான அவனது கோரிக்கையும் மறுக்கப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பின்னர் கடும் குற்றவாளிகளைத் தடுத்து வைத்திருக்கும் இடமாகக் கருதப்படும் அரசியல் கைதிகளை வைத்திருக்கும் முகாமிற்கு கஸ்ரோ இடமாற்றப்பட்டான்.

   பெறக்கூடியதாகவுள்ள ஏதேனும் நிவாரணம் பற்றி கஸ்ரோவிற்கு அறிவுரை செய்க.

3. ‘ஆரம்பத்தில் வலுவிகழ்தல் கோட்பாட்டிற்கான விதிவிலக்கை முகத்தோற்றத்தின் பதிவில் சட்டப்பிழை என்பது தந்திருந்தபோதிலும் ‘அனிஸ்மினிக்’ எனும் வழக்கானது முகத்தோற்றத்தின் பதிவில் சட்டப்பிழை எனும் கோட்பாட்டை வலுவிகழ்தல் கோட்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது.’

தீர்ப்புச் சட்டத்துடன் தொடர்புபடுத்தி இக்கூற்றை ஆராய்க.

4. ‘பாராளுமன்றத்தால் தமக்கு வழங்கப்பட்ட நியதிச்சட்ட அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு அமைச்சர்களுக்கு பரந்த தற்துணிபதிகாரம் வழங்கப்பட்ட போதிலும் நீதிமன்றத்தால் சாதாரணமாக மீளாய்வு செய்ய முடியாது மற்றும் எப்படியும் கட்டுப்படுத்த முடியாது எனக்கூறும் எந்த ஒரு அதிகாரமும் இல்லை:... தமது தற்துணிபதிகாரத்தை செயற்படுத்தும் போது தங்களால் இயன்றவரை நீதியாகவும், நியாயமாகவும், நாணயமாகவும் அரசியலமைப்பாக்க கடமையைச் செய்ய அமைச்சர்கள் கடமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்...’ - per *Ranasinghe J., J.B textiles Industries Ltd., v. Minister of Finance and Planning(1981) 2 S L R 238 at P. 256 – 257.*

தற்துணிபதிகாரத்தின் மீதான நீதித்துறை கட்டுப்பாடு என்பதன் பின்னணியில் இக் கூற்றை விமர்சிக்குக.

5. ரிதிகமயின் நீரோடைக்கு அருகில் உள்ள தனது காணியில் ஜலால்டீன் ஒரு மாட்டிறைச்சிக் கடையை அமைத்துக் கொண்டான். பின்னர் சொசேஜஸ் உற்பத்திச்செய்யும் ஒரு தொழிற்சாலையாக அதனை அவன் அபிவிருத்தி செய்தான். கிராமத்தவர்களால் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட அருகில் உள்ள நீரோடையில் இறைச்சியை கழுவ பயன்படுத்திய நீர் அகற்றபட்டது. தொழிற்சாலையில் இருந்து நீர் அகற்றப்பட்டதன் விளைவாக நீரோடை தீழ்படைந்தது. நீரோடையை பாவித்த அப்பிரதேச மக்கள் சுகயீனமுற்றதுடன் அந்நீரோடையில் நீராடியதன் பின்னர் சுகயீனமுற்ற இரு சிறுவர்கள் இறக்கவும் நேர்ந்தது. ஓர் கர்ப்பிணித்தாய் கருச்சிதையிற்கு உள்ளானதுடன் அந்த நீரினால் உருவான நோயின் காரணமாக அவள் சுகயினமுற்றதாக மருத்துவச் சான்றுகள் வெளிப்படுத்தின.

அப்பிரதேசத்தின் சுற்றாடலின் தூய்மையை காப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் குப்பை கூழங்களை அகற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கும் வீதிகள், சிறு ஒழுங்கைகள் மற்றும் மைதானங்களைப் பராமரிப்பதற்கும் நகர சபைச் சட்டத்தால் ரிதிகம உள்ளுராட்சி சபையானது அதிகாரப் படுத்தப்பட்டிருந்தது. ஜலால்டீனால் நீரோடைக்குள் தீழ்படைந்த நீர் அகற்றப்படுதல் தொடர்பில் ரிதிகம உள்ளுராட்சிச் சபைத் தலைவருக்கு வாய்மூலமும் எழுத்து மூலமும் கிராமத்தவர்களால் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டதுடன் இறைச்சித் தொழிற்சாலையில் இருந்து கழிவு நீரை அகற்றுதலை தடைசெய்ய நடடிவடிக்கை எடுக்கும்படி அல்லது அப்பிரதேசத்தில் இருந்து சொசேஜஸ் தொழிற்சாலையை அகற்றும்படி அவரிடம் கோரப்பட்டது. ஆனால் உள்ளுராட்சிச் சபையால் அந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்போது தமக்கு ஏதாவது நிவாரணம் உள்ளதா என கிராமத்தவர்கள் உமது அறிவுரையை நாடுகின்றனர்.

அவர்களுக்கு அறிவுரை செய்க.

6. 'நிருவாகச் சட்டம் எனும் பரப்பிற்குள் மிகவும் பயனுள்ள ஆயுதமாக விளம்பல் கட்டளை எனும் ஒப்புரவான நிவாரணம் இருக்கின்ற போதிலும் இலங்கையில் விளம்பல் கட்டளையை வழங்குவது தொடர்பில் ஒரு சர்ச்சைக்குரிய நியாயாதிக்கப் பிரச்சினை இருக்கின்றது.'

மேற்தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இந்நிலைமையை மேம்படச் செய்ய தீர்ப்புச் சட்டத்துடன் கூடிய உமது ஆலோசனையை தருவதுடன் விபரிக்குக.

7. சுனாமி அனர்த்த நஷ்டஈட்டுச் சபையானது ரெஸ்டோரியாவின் பாராளுமன்றச் சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட அங்கமாகும். சுனாமியால் சேதத்திற்குள்ளான வீடுகள் மற்றும் கட்டடங்களின் மீள்நிர்மானத்திற்காக நஷ்டஈடு வழங்கவதற்கு சபையானது அதிகாரம் பெற்றிருந்தது. சட்டத்தின் ஒரு பிரிவானது "சபையின் தீர்மானமானது இறுதியானதும் முடிவானதுமாகும் என்பதுடன் எந்த ஒரு நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்த முடியாது" என விளம்புகிறது. சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட அங்கமான ஆலோசனைக் குழவின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்ற பின்னர் மாத்திரமே நஷ்ட ஈட்டை வழங்குவதற்கு சபை அதிகாரம் பெற்றுள்ளது என சட்டம் மேலும் கூறுகின்றது. சுனாமியால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் களத்திற்குச்சென்று பார்வையிட்டு மதிப்பீட்டை வழங்கும் செயற்பாடு குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சுனாமியால் பகுதியளவில் பாதிப்பிற்குள்ளான தனது கட்டடத்தின் மீள் நிர்மாணத்திற்கு நஷ்டஈட்டை பெறும் முகமாக சுனாமியின் பாதிப்பிற்கு உள்ளான பிரதேசமான ரெஸ்டோரியாவின் வெலிங்டன் வாசியான அந்தோனி விண்ணப்பம் ஒன்றை அனுப்பியிருந்தான். குழுவானது அந்தோனிக்கு பாதிப்பிற்கான 50% கொடுப்பனவிற்கு பரிந்துரை செய்தது. எப்படியிருப்பினும் குழுவின் தலைவர் அவரது விண்ணப்பத்தை நிராகரித்ததுடன் நிராகரிப்பிற்கான எந்த ஒரு காரணத்தையும் தர மறுத்தார். நஷ்டஈட்டிற்கான கொடுப்பனவு தனக்கு மறுக்கப்பட்டதற்கான காரணம் தான் எதிர் அரசியல் கட்சியின் அங்கத்தவர் என்பதாகும் என அந்தோனி குற்றம்சாட்டுகின்றார். தனது குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் ஆலோசனைக் குழுவின் அறிக்கை பெறப்படாமலே நஷ்டஈட்டைப் பெற்றுக்கொண்ட ஆளும் கட்சியின் ஆதரவாளர்களின் பெயர்களை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ரெஸ்டோரியாவில் வலுவில் இருக்கும் நியதிச்சட்டமானது இலங்கையின் பொருள் கோடல் கட்டளைச் சட்டத்தை ஒத்ததெனக் கருதி தலைவரின் தீர்மானத்தை அந்தோனியால் கேள்விக்குட்படுத்த முடியுமா என அந்தோனிக்கு அறிவுரை செய்க.

8. 'குறிப்பிட்ட ஒரு விடயத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் செயற்படுத்த சட்டமாக்குவதற்கு பராளுமன்றத்திற்கு நேரமில்லாத நிலையில் ஒரு நாட்டின் வேகமான அபிவிருத்திக்கு கையளிக்கப்பட்ட சட்டவாக்கமானது அவசியமாகின்றது. எப்படியிருப்பினும் கையளிக்கப்பட்ட சட்டவாக்கமானது மக்களின் அக்கறையை பாதுகாக்கும் வகையில் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கப்பட வேண்டும்.'

கையளிக்கப்பட்ட சட்டவாக்கத்தின் மீதான நீதித்துறை கட்டுப்பாட்டுடன் தொடர்புபடுத்தி இக் கூற்றை ஆராய்க.

(பதிப்புரிமை பெற்றது)